திருவாவடுதுறை ஆதீன வெளியீடு.

உ

திருச்சிற்றம்பலம்.

# வடகுரங்காடுதுறை

ஆதீனம், திருவாவடுதுறை,
தஞ்சாவூர் ஜில்லா.

திருவாவடுதுறை ஆதீன வெளியீடு.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# வடகுரங்காடுதுறை

## வரலாறு, தேவாரத்திருப்பதிகம் முதலியன

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து
இருபதாவது குருமகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகள்**

விகிருதியாண்டு ஆவணித்திங்கள் ௨அ ஆம் நாள்
வழிபாட்டிற்கு எழுந்தருளியதன் நினைவாக வெளிவருவன.

திருவாவடுதுறை ஆதீன ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகரது
காக்ஷைப் புலவர் கல்லூரி விரிவுரையாளர்
திரு. மு. சடகோபராமாநுசம் பிள்ளையால்
பதிப்பிக்கப் பெற்றன.

திருவாவடுதுறை ஆதீனம் திருவாவடுதுறை.
தஞ்சாவூர் ஜில்லா.

1950

# பொருளடக்கம்.


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | வடகுரங்காடுதுறை தலவரலாறு | 1 |
| 2. | பெரியபுராணம் | 3 |
| 3: | திருஞானசம்பந்தமூர்த்திகள் தேவாரம் | 5 |
| 4. | திருப்புகழ் | 9 |

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

### ஸ்ரீ மெய்கண்டதேவர் துதி.

பண்டைமறை வண்டரற்றப் பசுந்தேன் ஞானம்
பரிந்தொழுகச் சிவகந்தம் பரந்து நாறக்
கண்டவிரு தயகமல முகைக ளெல்லாங்
கண்டிறப்பக் காசினிமேல் வந்தவருட் கதிரோன்
விண்டமலர்ப் பொழில்புடைசூழ் வெண்ணை மேவும்
மெய்கண்ட தேவனமிகு சைவ நாதன்
புண்டரிக மலர்தாழச் சிரத்தே வாழும்
பொற்பாத மெப்போதும் போற்றல் செய்வாம்.

### குருமரபு வாழ்த்து.

கயிலாய பரம்பரையிற் சிவஞான போதநெறி
காட்டும் வெண்ணை
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பானு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் றிருமரபு நீடூழி
தழைக மாதோ.

திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்து உ௰ ஆவது பட்டத்தில் எழுந்தருளி ஞானச் செங்கோல் செலுத்தும் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் மக்கள் இம்மை மறுமைச் செல்வங்களைப் பெற்று இனிது வாழும் பொருட்டுச் செய்து வரும் பல அருட் செயல்களையும் நம் நாடு நன்கறிந்ததே யாகும்.

இப்பொழுது நம் நாடு இருக்கும் நிலையை நோக்கித் தெய்வவுணர்ச்சியும் மக்கள் நல்வாழ்வுக்காய ஏனைய நல்லுணர்ச்சிகளும் பல்வகையானும் வளரவேண்டு மென்று திருவுளங்கொண்டு, அது நிறைவேறுதற்கு, ஊர்தோறுஞ் சென்று பலதிறப்பட்ட மக்களோடு பயில வேண்டுவது விரும்பப்படுவ தொன்றெனக் கண்டு பல திருப்பதிகளையும் வழிபடும் பண்டைய முறையைக் கையாளத் திருவுள்ளங் கொண்டுள்ளார்கள்.

குருமகா சந்நிதான மவர்கள் திருவுள்ளப்படி விக்ருதி ஆண்டு ஆவணி 22 ஆம் நாள் வியாழக் கிழமை திருவாவடுதுறையி னின்றும் புறப்பட்டு இடையிலுள்ள பல திருப்பதிகளையுங் கண்டு வணங்கி, புரட்டாசி முதல் நாள் ஞாயிற்றுக்கிழமை திருவானைக்காவிற்கு எழுந்தருளத் திருவுள்ளங் கொண்டுள்ளார்கள். பின்னர் பாண்டி நாட்டுத் திருப்பதிக ளெல்லாங் கண்டும் வணங்கியும் திருமடங்களைக் கண்காணித்தும் வரத் திருவுள்ளங் கொண்டுள்ளார்கள். அந் நிகழ்ச்சிக் குறிப்புகள் பின்னர் வெளிவரும்.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் வழியில் வழிபடும் திருப்பதிகளின் வரலாறுகளையும் அவற்றிற் குரிய திருப்பதிகங்களையும் எல்லோரும் அறியும் முறையில் அச்சிட்டு வழங்கவேண்டு மென்று கட்டளையிட்டபடி இத் திருப்பதியைக் கண்டு வணங்கும் நினைவாக இந் நூல் வெளிவருகிறது. இவ் வரலாறுகளையும் திருப்பதிகங்கட்குக் குறிப்புகளையும் எழுதித் தொகுத்த கரந்தையிலுள்ள எங்கள் கல்லூரி ஆசிரியர்கள் தொண்டும் மிகச் சுருங்கிய காலத்தில் அச்சிட்டுக் கொடுத்த கூட்டுறவுப் பதிப்பகத்தாரது ஒத்துழைப்பும் பெரிதும் பாராட்டத் தக்கன.

ஸ்ரீ நமசிவாய மூர்த்தி திருமரபு வாழ்க.

வடகுரங்காடுதுறை
விக்ருதி, ஆவணி, உஅ.

ஒடுக்கம் சுப்புக்குட்டித் தம்பிரான்.

உ

திருச்சிற்றம்பலம்.

# வடகுரங்காடுதுறை.

வடகுரங்காடுதுறை என்பது காவிரியின் வடகரையிலுள்ள தலங்கள் அறுபத்து மூன்றனுள் ஒன்று. கொங்கிற் குரங்காடுதுறை, தென் குரங்காடு துறை எனக் குரங்காடுதுறை பலவுள. இத் தலம் ஐயம்பேட்டைப் புகைவண்டி நிலையத்திலிருந்து வடக்கே மூன்றுகல் தொலைவி லுள்ளது; குடந்தைத் திருவையாற்றுச் சாலையில் பன்னிரண்டாவது கல்லி லுள்ளது. இத் தலத்துள் ஆண்டவன் ஆலயம் மிக அழகான அமைப்பு. முன் கோபுரம் ஐந்தடுக்குத் தோற்றம். உள் சென்றதும் வடக்கில் முப்பத்திரண்டு கல் தூண் மண்டபம். அதனை யடுத்துச் சிறிது தொலைவில் அம்மையின் அழகிய கோயில். அதனை யடுத்துத் தனிப் பிரகாரம். அதனைக் கடந்து உட் சென்றால் இருபத்து நான்கு கல்தூண் நிறுவிய மண்டபத்தின் வடபால் கூத்தப் பெருமானது மூலத்தானம் சிறந்த முறையில் அமைந்துள்ளது. அந்தராள மண்டபம் (கர்பக்கிரகம்) ஒன்றுண்டு. அதற்குத் தூண்கள் ஆறு. மகாமண்டபம் தூண்கள் பன்னிரண்டா லானது. சுற்றுப்புறத்து மூத்த பிள்ளையார் சண்டேசுவரர் இவர்கள் கோயில்கள் தனியாக அமைந்துள்ளன.

இத்தகைய சிறப்பு வாய்ந்த கோயிலுள் அமைந்த இறைவன் பெயர் அழகுசடைமுடிநாதர், குலைவணங்கீசர், வாலிநாதர், தயானேசுவர சுவாமி, சிட்டுலிங்கநாதர், என்பனவாம். அம்மையின் பெயர் அழகு

சடைமுடி அம்மை. இப் பெயரினை உமாபதி சிவம் தன் சிவக்ஷேத்திர சிவநாமக் கலிவெண்பாவில் "சொல்லு குரங்கு—ஆடுதுறை மேவும் அழகு சடை முடியாள், நாடுங் குலைவணங்கு நாயகா" என்று கூறுவதால் அறியலாம்.

இறைவன் பெயர்க்குத் தக்க காரண முண்டு: அன்பு கெழுமிய செட்டிப் பெண்ணின் நீர் வேட்கையினைத் தணிப்பதற்கு இறைவன்; தென்னை, குலைவணங்கி இளநீர்த் தந்துதவும்படிச் செய்தது; அத் தலத்துத் தலவிருட்சம் தென்னையா யிருத்தலால் அறியலாம். இவ் வம்மையின் படிமத்தை இக் கோயிலில் இன்றுங் காணலாம். *வாலி வழிபட்டதால் வாலிநாதர். சிட்டுக் குருவிக் கருளியதால்

---

*வாலி சிவபக்தி மிக்கவன் என்பதனைக் கம்பர் அனுமான் அங்கதன் இருவர் வாயிலாகத் கூறுவன நோக்கத் தக்கன:

நாலு வேதமா நவையிலார் கலி
வேலி யன்ன தொன்மலையின் மேலுளான்
சூலி தன்னருள் துறையின் முற்றினான்
வாலி என்னுளான் வரம்பி லாற்றலான்.

கிட்டு வார்பொரக் கிடைக்கி னன்னவர்
பட்ட நல்வரம பாகம் எய்துவான்
எட்டு மாதிரத் திறுதிநாளும் உற்று
அட்ட மூர்த்திதாள் பணியு மாற்றலான்

பஞ்சின்மெல் லடியாள் பாகன் பாதுக மல்ல யாவும்
அஞ்சலித் தறியாச் செங்கை யாணையாய் அமரர் யாரும்
எஞ்சலி லிருந்தா ருன்னால் இன்னமு தீந்த நீயோ
துஞ்சினை வள்ளி யோர்கள் நின்னின்யார் சொலற்
பாலார்

என்ற இப் பாட்டுகள் படித் தின்புறத் தக்கன.

சிட்டுலிங்கநாதர். பல பொருளைத் தரும் நயமனேசுவரர் என்று இன்றும் அழைக்கப் படுகிறார். சுவாமி சந்நிதி விமானத்தில் வரலாற்றுக் கேற்ற வகையில் உருவங்கள் செதுக்கப் பெற்றுள்ளமை காணத் தக்கன.

இக் கோயில் மிகப் பழமையானது. இதனை சம்பந்தமூர்த்தி சுவாமிகள் காலத்திற்குப் பின் வந்த உத்தம சோழன் தாயாராய செம்பியன் மாதேவியார் பெரிதும் புதுப்பித் துள்ளார். இக் கோயிலுக்கு நிலங்கள் தானமாக விடப் பெற்றன என்பதனைக் கல்வெட்டுகளால் அறிகின்றோம். இக் கோயிலின் சுவரில் கல்வெட்டுகள் பல வுண்டு. அவற்றுள் பதினைந்து கல்வெட்டுகளைக் கல்வெட்டு இலாகாகாரர் வெளியிட் டுள்ளார். மராட மன்னர் வழிவந்த மகாராணி ஸ்ரீமதி ஜிஜாம்பா பாய் சாகேப் அவர்கள் 1907ல் இக் கோயிலைப் புதுப்பித்துக் குடமுழுக்கு விழாவும் செய்து வைத்தார்.

இத் தலத்திற்குத் திருஞான சம்பந்தரால் பாடப் பெற்ற தேவரத் திருப்பதிகம் ஒன்றுண்டு. இதற்கு ஒரே பதிகம்தான் உண்டு என்பதனை, சிவக்ஷேத்திரப் பதிகக்கோவையுள் இது ஒரு பதிகம் பெற்ற தல மெனக் குறிக்கப் படுவதால் அறிகின்றோம். திருஞான சம்பந்தர் சீகாழியில் தோன்றி நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிச் சைவத்தை வளர்ப்பான் வேண்டித் தலங்கள்தோறும் சென்று ஆங்காங்குள்ள இறைவனை வழிபட்டு வரலாயினர். இவர் வரலாறு விரிப்பிற் பெருகுமாதலான் இத் தலத்து இவரடைந்த பகுதியை மட்டும் சேக்கிழார் பெருமான் செஞ்சொல்லாற் காணலாம்.

இன்னம்பர் பிரானை இறைஞ்சி இடைமடக்கான
பன்னுந் தமிழ்த்தொடை மாலைபுனைந்து பரவிப்

பொன்னங் கழலிணைப் போற்றிப்புறம்
போந்தணைந்து புகுந்தார்
மன்னும் தடங்கரைப் பொன்னி வடகுரங்
காடுதுறையில்.

வடகுரங் காடுதுறையில் வாலியார்தாம் வழிபட்ட
அடைவுந் திருப்பதிகத்தில் அறியச் சிறப்பித்தருளிப்
புடைகொண் டிறைஞ்சினர் போந்து புறத்துள்ள
தானங்கள் போற்றிப்
படைகொண்ட மூவிலை வேலார் பழனத் திருப்பதி
சார்ந்தார்.

இப் பாக்கள் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் காவிரியின் வடகரையி லுள்ள தலங்களைச் சேவித்துக் கொண்டு சென்றதனையும், வடகுரங்காடு துறையில் இறைவனை வழிபட்டதனையும் குறிக்கும். இவற்றின் திறம் விரிப்பிற் பெருகும்.

இத் திருப்பதிக்கு அருணகிரிநாதர் அருளிய வண்ணங்கள் மூன்றுள.

திருச்சிற்றம்பலம்

# வடகுரங்காடுதுறை.

பண் : சாதாரி | பதிகம் ௨௪௯

திருச்சிற்றம்பலம்.

## திருஞானசம்பந்தர் அருளிச்செய்த மூன்றாந் திருமுறை.

கோங்கமே குரவமே கொழுமலர்ப் புன்னையே கொகுடி முல்லை
வேங்கையே ஞாழலே விம்முபா திரிகளே விரவி யெங்கும்
ஓங்குமா காவிரி வடகரை யடைகுரங் காடுதுறை
வீங்குநீர்ச் சடைமுடி யடிகளா ரிடமென விரும்பி னாரே -௧

கருத்து : கோங்கு முதலிய மலர்கள் நிறைந்ததும், காவிரியின் வடகரையிலுள்ளதுமான குரங்காடுதுறையை உறைவிடமாக விரும்பி இறைவன் தங்கினார்.

ஞாழல்-புலிநகக் கொன்றை, கொகுடி-முல்லைக் கொடியின் வகை. விம்முபாதிரி-பூக்களை மிகுவிக்கும்படியான பாதிரி மரம், விரவி-ஒன்றோடொன்று கலந்து, எங்கும் ஓங்கும்-எங்கும் பரவிய, மா-சிறந்த, வடகரையடை-வட பக்கத்தையடுத்துள்ள, வீங்குநீர்-சிறப்பு மிக்க கங்கை, அடிகள்-குலவணங்கு நாயகர், அடிகள்-இது இறைவனையும் அவனருள் பெற்றுய்ந்தாரையுங் குறிக்கும். காவிரியின் வடகரையிலுள்ளமைபற்றி இத்தலம் வடகுரங்காடுதுறை எனப் பெற்றது.

மந்தமா யிழிமதக் களிற்றிள மருப்பொடு பொருப்பினல்ல
சந்தமா ரகிலொடு சாதியின் பலங்களுந் தகைய மோதி
உந்துமா காவிரி வடகரை யடைகுரங் காடுதுறை
எந்தையா ரிணையடி யிமையவர் தொழுதெழு மியல்பினாரே

கருத்து : பலவகையாய சிறப்புப் பொருந்திய காவிரியின் வடகரையிலுள்ள இவ்வூரிடத் தமர்ந்த இறைவனைத் தேவர்களும் வந்து வணங்குகின்றார்கள்.

மந்தம்-மெதுவாக, இழி-இறங்குகின்ற, மதக்களிறு-மதத்தையுடைய ஆண்யானை, மருப்பு-தந்தம், பொருப்பின்-மலையிடத்துள்ள, சந்தம்-சந்தன மரம், ஆர்-பொருந்திய, சாதியன் பலங்கள்-சிறந்த தேமா முதலிய மரங்களின் பழங்கள், தகைய-ஒன்றோடொன்று நெருங்க, மோதி-ஆற்று வெள்ளமிவற்றைக் கரையில் மோதும்படிச் செய்து, உந்து-ஒதுக்குகின்ற. இமையவர்-தேவர், இயல்பினர்-தகுதியுடையவர்.

முத்துமா மணியொடு முழைவளை ராரமு முகந்துந்தி
எத்துமா காவிரி வடகரை யடைகுரங் காடுதுறை
மத்தமா மலரொடு மதிபொதி சடைமுடி யடிகள்தம்மேல்
சித்தமாம் அடியவர் சிவகதி பெறுவது திண்ணமன்றே -௩

கருத்து: இத்தலத்துள்ள இறைவனிடத்து உண்மை யன்புடையார் சிவகதி அடைவது உறுதி.

முழைவளர் முத்து மாமணியொடு ஆரமு முகந்து என மாற்றுக. முழைவளர்-மலைக்குகை யிடத்துள்ள, சிங்கங்கள் யானைகளின் மத்தகத்தைப் பிளக்கும்பொழுது தம் கால் நகங்களில் பதிவன, பின்னர் சிங்கஞ் சென்று குகையில் தங்கும் பொழுது உதிர்வனவாய முத்துக்கள். எத்தும்-எத்திறத்தும். மத்த மாமலர்-ஊமத்த மலர், மதிபொதி-மூன்றாம்பிறை தங்கியுள்ள, சித்தம்ஆம்-மனம் வைக்கின்ற, திண்ணம்-உறுதி.

கறியுமா மிளகொடு கதலியின் பலங்களும் கலந்துந்தி
எறியுமா காவிரி வடகரை யடைகுரங் காடுதுறை
மறியுலாம் கையினர் மலரடி தொழுதெழ மருவுமுள்ளக்
குறியினா ரவர்மிகக் கூடுவார் நீடுவா னுலகினூடே -௪

கருத்து: இத்தலத்துள்ள இறைவனைத் தொழுது வணங்குவதனையே தங்கள் குறிக்கோளாகக் கொண்டவர் வானுலகில் வாழ்வார்.

கறி-கறிக்கத்தக்க, கதலி-வாழை, பலம்-பழம், எறியும்-கரையில் தள்ளும், மறி-மான், மலரடி..............குறியினார் என்றது இறைவன் திருவடி வணங்குவதிலேயே மனக்குறிப்புடையார் என்றபடி, நீடுவான்-பெரிய வானுலகம், ஊடு-இடம்.

கோடிடைச் சொரிந்த தேனதனொடுங் கொண்டல்வாய்
விண்டமுன்னீர்
காடுடைப்பீலியுங் கடலுடைப் பண்டமுங் கலந்துந்தி
ஓடுடைக் காவிரி வடகரை யடை குரங் காடுதுறை
பீடுடைச் சடைமுடி யடிகளா ரிடமெனப் பேணினாரே -௫

கருத்து: இத்தலத்தை விரும்பி இறைவன் தன்னிடமெனக் கொண்டனன்.

கோடிடை - கிளைகளிடத்திருந்து, சொரிந்த - ஒழுகிய, தேன் + அது, அது பகுதிப்பொருள் விகுதி. கொண்டல்-மேகம், வாய்விண்ட-வாயைத் திறந்து துளித்த, பீலி = மயில்பீலி, கடலுடைப்பண்டம் - கடலிடத்துண்டாகின்ற முத்து இரத்தின முதலியவை, ஓடுடை-ஓடுதலுடைய, பீடு-பெருமை, இடமென-உறைவிடமென, பேணினார்-விரும்பினார்.

கோலமாமலரொடு தூபமுஞ் சாந்தமுங் கொண்டுபோற்றி
வாலியார் வழிபடப் பொருந்தினார் திருந்துமாங்கனிகளுந்தி
ஆலுமாகாவிரி வடகரை யடைகுரங்காடுதுறை
நீலமாமணி மிடற்றடிகளை நினையவல் வினைகள் வீடே -சு

கருத்து: **வாலியார் வழிபட்ட இத்தலத்து இறைவனை நினைக்கின்றவர்கள் வல்வினைகளினின்றும் விடுபடுவார்கள்.**

மிடற்று அடிகள், வாலியார் வழிபடப் பொருந்திய அடிகள் எனக்கூட்டி முடிக்க கோலம்-அழகு, தூபம்-புகை, சாந்தம்-சந்தனம், போற்றி-துதித்து வழிபட-வணங்க, திருந்து-திருந்திய (நல்ல), ஆலும்-ஒலிக்கின்ற நீலம்-நீல நிறம், மா-சிறந்த, மணி-அழகிய, நீவினை-சஞ்சிதம், வீடு-விடுபடும், 'விடு' வீடு என முதனிலைத் திரிந்தது. ஏகாரம் தேற்றம்

எ. இப்பாட்டு காணப்பெற வில்லை.

நீலமாமணி நிறத்தரக்கனை யிருபது கரத்தோடொல்க
வாலினால் கட்டிய வாலியார் வழிபட மன்னுகோயில்
ஏலமோடிலை யிலவங்கமே யிஞ்சியே மஞ்சளுந்தி
ஆலியாவருபுனல் வடகரையடை குரங்காடுதுறையே -அ

கருத்து: **இத்தலம் வாலியாரால் வழிபடப் பெற்றது.**

**நீலம்-கருமை, அரக்கனை வாலினால் கட்டிய வாலியர், இருபது காத்தொடு ஒல்கக் கட்டிய வாலியார் எனக் கூட்டுக, ஒல்க-துவள, மன்னுதல் - நிலைத்தல், ஏலம் இலவங்கம் என்பன வாசனைப் பொருள்கள்.**

பொருந்திறல் பெருங்கைமா வுரித்துமையஞ்சவே யொருங்கு நோக்கிப்
பெருந்திறத் தனங்கனை யநங்கமா விழித்ததும் பெருமை போலும்
வருந்திறல் காவிரி வடகரையடை குரங்காடுதுறை
யருந்திறத் திருவரை யல்லல் கண்டோங்கிய வடிகளாரே -சு

கருத்து: **திருமால், அயன் இருவருடைய துன்பத்தைக் காண்பதற்கு ஓங்கிய சுவாமிகளே! யானையை உரித்துஉமை யஞ்ச மன்மதனை யெரித்தது பெருமைபோலும்.**

பொருந்திறல்-போர் செய்யத் தக்க ஆற்றல், கைமா-யானை, பெருந்திறத்தனாகிய அங்கத்தை யுடையவனை, அநங்கமா-அங்கமில்லாதவனாக ஆகும்படி, விழித்ததும் - விழித்து எரித்ததும், பெரும் + திறத்தன் + அங்கன் எனப் பிரிக்க. அருந்திறம்-சொல்லற்கரிய திறம், இருவர்-திருமால், அயன், அல்லல் - துன்பம். கண்டு காண எனத்திரிக்க. ஓங்கிய-நீண்ட வடிவைக் கொண்டு ஓங்கிய.

கட்ட மண்தேரருங் கடுக்கள்தின் கழுக்களும் கசிவொன்றில்லாப்
பிட்டர் தம்மறவுரை கொள்ளலும் பெருவரைப் பண்டமுந்தி
எட்டுமா காவிரி வடகரையடை குரங்காடுதுறைச்
சிட்டனுரடி தொழச் சிவகதி பெறுவது திண்ணமாமே -ம

கருத்து: தீய சமணர்கள் மறவுரையைக் கொள்ளாமல் இறைவனைத் தொழ சிவகதி பெறுவது திண்ணம்-

கட்டு அமணர்-பலவாகக் கட்டிச் சொல்கின்ற அமணர், தேரர்-அமணரில் ஒருவகையர், கடுக்கள்-பாம்பு, கழுக்கள்-கழுமரம். கசிவு-இளகல் (மனமிளகல்), பிட்டர்-விலக்கத்தக்கார், மறவுரை-மறக்கத் தக்க வுரை (பொருந்தாவுரை), கொள்ளல்-கொள்ளாதே, கொள்ளலும் இதில் உம்மையை அசையாகவாவது, தீது என்றொரு சொல் வருவித்து "கொள்ளுதலும் தீது" என்றாவது கூறுக. பண்டம்-பொருள், எட்டும்-நெருங்கி வருகின்ற, சிட்டனுர்-மேலானவர் (இறைவன்).

தாழிளங் காவிரி வடகரையடை குரங்காடுதுறைப்
போழிளமதி பொதி புரிதருசடை முடிப்புண்ணியனைக்
காழியானருமறை ஞானசமபந்தன் கருதுபாடல்
கோழையா வழைப்பினுங் கூடுவார் நீடுவானுலகினூடே
—மக

கருத்து: இத்திருப்பாசுரத்தால் பயன் சொல்லித் தலைக்கட்டுகிறார். இச்சிறப்பினையுடைய புண்ணிய மூர்த்தியைச் சம்பந்தமூர்த்தி சுவாமிகள் கூறிய பாட்டால் கோழையாக் கூப்பபடினும் வானுலகாள்வர். தாழ் இளம் காவிரி-தாழ்ந்த இளமையான சோலைவிரிந்த ஆறு. இதனால் காவிரியின் பெயாத்தன்மையும் கூறினாராயிற்று. போழ்-பிளந்த, புரிதருசடை-முறுக்கி விட்ட சடை * காழி-சீகாழி, கருதுபாடல்-கருதிக் கூறிய பாடல். கோழை-மனத்திடமில்லாமை. நீடுவானூடு கூடுவார்.

---

* காழ்-வயிரம், காழி-வயிரத்தையுடையது; பெண்பாலுக்கு ஆயிற்று. இப்பெயர் காணி என வழங்கும். இஃது அறியாதார் சீர்காழி, சிய்யாழி என்பர். சீகாழியே உண்மைப் பெயர். சீ ஆகிய காழி என்பது பொருள்.

உ

திருச்சிற்றம்பலம்.

# திருப்புகழ்.

திருப்புகழ், முருகப்பெருமான் புகழ் பலவற்றையும் சிறப்பித்துத் தோத்திர வடிவத்தில் அமைந்தது. இதற்கு அவன் புகழைப் பரப்புவதால் திருப்புகழ் எனப் பெயராயிற்று. திரு, புகழுக்கு அடையாகச் சேர்ந்து சிறப்பினைக் குறிக்கும். அவன் அருள் பெற்றுயர்ந்த அருணகிரிநாதரால் இயற்றப் பெற்றது. முழுவதும் வண்ணத்தாலாயது. இசைக்கு, வடிவம் தானம், இராகம் நிறம் என்றும், இவ்விரண்டானும் தாள அமைதியை அறுதியிட்டுக் கூறுகின்றது இந்நூல் என்றும் கூறுவர் பெரியோர்.

இவர் செய்த வேறு நூல் கந்தரலங்காரம், கந்தரந்தாதி, கந்தரனுபூதி, மயில்விருத்தம், வேல்விருத்தம் என்பனவாம்.

அலங்கார முடிக்கிரணத் திரண்டாறு முகத்தழகிற்கு
அசைந்தாடு குழைக்கவசத் திரள்தோளும்
அலந்தாம மணித்தரளம் புரண்டாட நிரைத்த,கரத்(து)
அணிந்தாழி வளைக்கடகச் சுடர்வேலும்
சிலம்போடு மணிச்சுருதிச் சலங்கோசை மிகுத்ததிரச்
சிவந்தேறி மணந்தமலர்ப் புனைபாதம்
திமிந்தோதி திமித்திமிதித் தனந்தான தனத்தனனத்
தினந்தோறு நடிப்பதுமன் புகல்வேனோ
இலங்கேசர் வனத்துள்வனக் குரங்கேவி யழற்புகையிட்(டு)
இளந்தாது மலர்த்திருவைச் சிறைமீளும்
இளங்காள முகிற்கடுமைச் சரங்கோடு கரத்திலெடுத்(து)
இருங்கான நடக்கு மவர்க்கு இனியோனே
குலங்கோடு படைத்தசுரப் பெருஞ்சேனை யழிக்கமுனைக்
கொடுந்தாரை வெயில்கயிலைத் தொடும் வீரா
கொழுங்காவின் மலர்ப்பொழிலில் கரும்பாலை புணர்க்குமிசைக்
குரங்காடு துறைக்குமரப் பெருமானே.

கருத்து: முருகன் தோள் முதலிய அவயவச் சிறப்பு, இராவணனை வென்ற இராமனுக்கு இனியான், அசுர குலத்தை வேரறுத்தவன் என்பனவாம்.

முடி கிரணம் திரண்டு-முடியின் ஒளி முழுவதும் ஒன்று சேர்ந்து, கவசம்-மேற்சட்டை, அலம்-அசைதல், தாமம்-அழகு, மணி-இரத்தினம், தாளம்-முத்து, கடகக் காத்துன்னவேல் ஊக்கட்டுக. கடகம்-தோள்வளை, சலங்கு-சதங்கை, அழல்-நெருப்பு, திரு-சீதை, திருமகளை சீதையாக வர்தமை கருதி இங்ஙனம் கூறினர். காளம்-கருமை முகில்-மேகம், இருங்காணம் நடக்குமவர்-இராமன்; இருங்காணம்-பெரிய காடு, குலம் கோடு படைத்து-அசுரக்கூட்டம் மாறுபடும்படிச் செய்து, முனை-போர் முனை, தாரை-முதற்படை, கயிலைத்தொடும் வீர-கயிலையளவும் சேனைகள் செல்லும்படிச் செய்த வீரனே, கொழுங்கா-செழித்த மரங்களடர்ந்த தோப்பு, மலர்ப் பொழில்-மலரைத் தரும் மரங்களுடைய சோலை, புணர்க்குமிசை-சேர்க்குமிடத்து, குரங்காடு துறை, வாலியார் வழிபாடு செய்த வடகுரங்காடுதுறை, ஆடு-வழிபாடு செய்தல், துறை-வழி, பகுதி.

குடங்கள் நிறைத்தேறு தடங்கள் குறித்தார வடங்கள் அசைத்தார செயநீலம்
குதமபை யிடத்தேறு வாடிந்த குழைக்காது குளிர்ந்த முகப்பார்வை வலையாலே
உடபு மறக்கூனி நடந்து மிகச்சாறி யுலந்து மிகக்கோலும் அகலாதே
உறங்கி விழிப்பாய பிறந்த பிறப்பேனும் உரங்கொளா, பொற்பாதம் அருள்வாயே.
விடங்கள் கதுப்பேறு படங்கண் ணடித்தாட விதங்கொள் முதற்பாயல் உறைமாயன்
விலங்கை முறித்தோடி யிடங்கள் வளைத்தேறு விளங்கு முகிற்கான மருகோனே
தடங்கொள் வரைச்சாரல் நளுங்கு மயிற்பேடை தழங்கு மியற்பாடி யளிசூழத்
தயங்கு வயற்சாரல் குரங்கு குதித்தாடு தலங்க ளிசைப்பான பெருமாளே.

கருத்து: பெண்களால் வருந்துன்பத்தி னின்று நீங்கி எடுத்த பிறவியிலேயே அவன் திருவடியடைய வேண்டும்.

குடங்கள் நிறைத்து ஏறு தடங்கள்-குடங்கள் போன்ற முலைகள், ஏறுதல்-நிமிர்தல், குறித்து-குறிப்பிட்டு, ஆர்வடங்கள் முத்துமாலைகள் ஆர்-நிறைய, செய-செய்யிட்டுள்ள (செய்ய

என்பதன் விகாரம்), செய்-வயல், நீலம்-நீலமலர், குதம்பை,நெட்டி இவைகள் காதிலிடப்படுவன, நீல மலரைக் காதில் செருகிக் கொள்வது மரபு, ஏறு-காதில் ஏறும்படிச் செய்து, வடிந்த-நீண்ட, குழை-காதணி, அறக்கூனி-மிகவும் வளைந்து, சாறி-நழுவவிடுப வன், உலந்து-வருந்தி, கோல்-ஊன்று கோல், இழிப்பாய-இழி வான, பிறந்த பிறப்பேனும் உய்ங்கொள-பிறந்த இப்பிறப்பாவது நல்வழி அடையும்படி, பொன்-அழகு, விடங்கள்...........பாயல் என்றது காளிங்கன் தலைமீது நடித்தது, ஆதிசேஷன்மீது அறி துயில் கொண்டது ஆயவற்றைக் குறிக்கும், விலங்கை......கான மருகோனே என்றது விலங்குகளை வதைக்கும் காட்டு வேடர் மருகோனே என்றபடி; நளுங்கு-வருந்தும்படியான, தழங்கும்-ஒலிக்கின்ற, பேடை-பெண்மயில். அளிசூழ-வண்டுகள் சூழத்தக்க தயங்கு-விளங்குகின்ற, சாரல்-இடம், "குரங்குத்......தலங்கள்" என்பது வாலி, சுக்ரீபன், அனுமார் பலரும் வழிபட்ட பல தலத்தை யென்க. இசைப்பான-தகுதியான, பெருமான்-பெருமையை ஆள்பவன்

குறித்தநெஞ் சாசை விரகிகள்
நவிற்றுசங் கீத மிடறிகள்
குதித்தரங்கேறு நடனிகள் எவரோடும்
குறைப்படுங் கர்தல் குணிகள்
அரைப்பணங் கூறு விலையினர்
கொலைக்கொடும் பார்வை நயனிகள் நகைசேர்க்கைப்
பொறித்தசிங் கார முலையினர்
வடுப்படுங் கோவை யிதழிகள்
பொருள்தினந் தேடு கபடிகள் வழிசேரப்
புறப்படும் பாவ சொருபிகள்
உருக்குசம் போக சரசிகள்
புணர்ச்சிகொண் டாடு மருளது தவிர்வேனோ
நெறித்திரண் டாறு கரமலர்
மணத்தபைங் கோதை வளைகுழல்
நிரைத்திடுஞ் சோதி வனசரி மணவாளா
நெருக்கு மிந்த்ராதி யமரர்கள்
வளப்பெருஞ் சேனை யுடையவர்
நினைக்குமென் போலும் அடியவர் பெருவாழ்வே

செரித்தமந் தாரை மகிழ்புனை
மிகுத்ததண் சோலை வகைவகை
நியக்கியம் பேறு நதியது பலவாறும்

நிரைக்கரங் கோலி நவமணி
கொழித்திடுஞ் சாலி வயல்மிகு
திருக்குரங் காடு துறையுறை பெருமாளே

கருத்து: விலைமாதர்களை விட்டுத் தான் விலக வேண்டுமென்று, முருகனிடத்து முறையிடல்.

குறித்த-பொருளையே குறிக்கோளாகக் கொண்ட, விரகி-தந்திரமுடையவள், நவிற்று-சொல்கின்ற, மிடறி-கழுத்துடையாள், (இனிய குரலுடையாள்) அரங்கு-நடனசாலை, நடனி-நடனத்தையுடையவள், குணகி-கொஞ்சிப் பேசுபவள், அரைப்பணங்கூறு-அரைக்காசுக்காகத் தங்களைக் கூறி விற்கிறவர்கள், நயனி-கண்ணுடையவள், நகரேகை-நகக்குறிகள். பொறித்த-அழுத்தப்பெற்ற. சிங்காரம்-அழகு, வடு-தழும்பு, கோவை-கோவைப்பழம், உருக்கு-மனத்தை உருக்கும்படியான, மருள்-மயக்கம், நெறித்து-வளைத்து, இரண்டாறு-பன்னிரண்டு, மணத்த-மணத்தையுடைய, பைங்கோதை-பசுமையான மாலை வளைகுழல்-நெளிந்த கூந்தல் நிரைத்திடும்-வரிசைப்படும், வனசரி-வள்ளியம்மை, அமரர்-தேவர், வளம்-வளப்பம், செறித்த-நெருங்கிய, மகிழ்-மகிழமரம், புனை-அழகு செய்யப்பெற்று, மிகுத்த-உயர்வடைந்த, தண்-குளிர்ந்த, நியக்கம்-நியங்குதல், பேறு-செல்வம், பலவாறும்-பலவகையிலும், நிரைக்கரங்கோலி-நிரையாகிய கையை வளைத்து, கொழித்திடும்-கரையில் ஒதுக்குகின்ற, சாலி-நெல்.

திருச்சிற்றம்பலம்.

கூட்டுறவுப் பதிப்பகம், தஞ்சாவூர்.

உ

திருச்சிற்றம்பலம்

முத்தன் வருக! யாவருக்கு முன்னோன் வருக! முப்புவன
முதல்வன் வருக! முன்னாரை முன்னான் வருக! மறைமுடிவி
அத்தன் வருக! அகாவுயி ரனையான் வருக! நலனளிக்கும்
ஐயன் வருக! அகரமளித் தருள்வான் வருக! ஆகமநூல்
கத்தன் வருக! கருதுநர்தம் கருத்தன் வருக! கலப்புணர்த்தும்
கையன் வருக! அருளுருவக் காளை வருக! கவின்றுபொலி
சித்தன் வருக! கோமுத்திச் செல்வன் வருக! வருகவே
திகழ் சீர்க் குரு அம்பலவாண தேவன் வருக வருகவே.

மெய்கண்டார் திருமரபு வாழ்க.